<u>சுருக்கம்</u>

**திட்டங்கள் –மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் – மத்திய அரசு அறிவிப்பின்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப்பணிகளுக்கான ஊதியம் ரூ.167–லிருந்து ரூ.183–ஆக உயர்த்தப்பட்டது – தமிழ்நாட்டில் நடைமுறைபடுத்துதல் – ஊரக விலைப்பட்டியலைத் திருத்தி அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை**

**அரசாணை (நிலை) எண்.59** **நாள்:15.04.2015**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.26, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி.1)துறை, நாள்.27.02.2014.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–15 கடித எண். 23049/2015/ம.கா.தே.ஊ.வே.உ.தி.2–1 நாள் 06.04.2015

.....

**<u>ஆணை</u>** :

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் திறன்சாரா தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு வழங்கப்படும் ஊதியத்தினைரூ.148/– லிருந்து ரூ.167/– ஆக உயர்த்தியும் மற்றும் அதற்கு இணையாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊரக விலைப்பட்டியலை திருத்தம் செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மத்திய அரசானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் திறன்சாரா தொழிலாளர்களுக்கு 1.04.2015 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதியத்தினை அறிவித்துள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு, திறன்சாரா தொழிலாளர்களின் ஊதியத்தினை நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்குரூ.167/– லிருந்து ரூ.183/– ஆக மத்திய அரசானது உயர்த்தியுள்ளது.

3. மேலே இரண்டில் படிக்கப்பட் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005 – ஆனது ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை

அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதலுக்கு வழிவகை செய்துள்ளது என தெரிவித்துள்ளார்.

**4.** மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் **2005**, திருத்திய விலைப்பட்டியல் –I, பத்தி **17**ல் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

> 17. மாநில அரசுகளானது, பால் வேறுபாடுகளன்றி, செய்த வேலைகளின் அளவீடுகளின்படி, மாறுபட்ட கால நிலை மற்றும் பல்வேறு விதமான வேலைகளுக்கு தகுந்தவாறு கால நிர்ணய வேலை அளவினை (Time and Motion study) மேற்கொண்டு ஊரக விலைப்பட்டியலினை அவ்வப்போது மாற்றிக் கொள்ளலாம்.

**5.** மத்திய அரசின் அரசிதழ் அறிவிப்பு S.O.(400 E) நாள்.**13.02.2014**–ல் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ஊதியமானது ரூ.**148/–** லிருந்து ரூ.**167/–** உயர்த்தி அறிவிக்கப்பட்டதினை பின்பற்றி அரசாணை (நிலை) எண். **26**, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி.**1**) நாள்.**27.02.2014**ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது மற்றும் திருத்திய ஊரக விலைப்பட்டியலும் ஆணையிடப்பட்டுள்ளது என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**6.** மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர், மத்திய அரசானது, தற்பொழுது அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் திருத்திய ஊதியத்தினை **1.4.2015** முதல்அறிவித்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டிற்கு, நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கான ஊதியமானது ரூ.**167/–** லிருந்து ரூ.**183/–** ஆக திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இத்திருத்தமானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் **2005 (2005–**ல் **42)**, பிரிவு **6–**ல் உட்பிரிவு **(1)–**கீழ் அளித்த அதிகாரத்தினை பின்பற்றியதாகும் மற்றும் இது ஆண்டுதோறும் நிகழும் நிகழ்வாகும். **2015–16**ம் ஆண்டில் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு திருத்தியமைக்கப்பட்ட ஊதியம் ரூ.**183/–** ஆக **31.03.2015**ல் வெளியிடப்பட்டுள்ள மத்திய அரசின் அறிவிப்பினை பின்பற்றி திருத்திய ஊரக விலைப்பட்டியல் இங்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக, கரையின் நிலையான தன்மையினை நிலைநிறுத்துவதற்கு மண்கட்டி உடைப்பு மற்றும் கரையினை சமன்படுத்தி சாய்வாக அமைத்தல், இரும்பு தட்டு கொண்டு கரையினை கெட்டியாக பலப்படுத்துதல் மற்றும் பழைய கரையில் சாய்வு படிகள் அமைத்தல் ஆகிய செயற்பாடுகள் தேவைப்படுகிறது. மேலும் இதனை மத்திய அரசும் வலியுறுத்தியுள்ளது. எனவே, இந்த செயற்பாடுகளுக்கு கால இயக்க ஆய்வுகள் (Time and Motion study) முறையாக மேற்கொண்டு, ஊரக விலைப்பட்டியலில் மேற்கூறிய செயற்பாடுகளுக்கு விலைப்பட்டியல் நிர்ணயித்து புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது.

**7.** எனவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் திருத்திய ஊரக விலைப்பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு திருத்திய ஊதியமானது ரூ.**167/–**லிருந்து ரூ.**183/–** ஆக **1.4.2015** முதல் நடைமுறைபடுத்தப்படுவதற்கு தேவையான ஆணை வெளியிட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

**8.** அரசு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரின் கருத்துருவினை கவனமாக பரிசீலித்து பின்பு அதை ஏற்றுக் கொள்வதாக தீர்மானித்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் மத்திய அரசால் உயர்த்தப்பட்ட ஊதியத்தினை ஏற்று அதன்படி கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது:

i. தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், திறன்சாரா தொழிலாளர்களின் ஊதியம் நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ.167/– லிருந்து ரூ.183/– ஆக உயர்த்தப்படுகிறது.

ii. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ஊதியம் குறைந்த பட்சம் ரூ.183/– –ஐ பெறுவதற்கு 2015–16ஆம் ஆண்டுக்கு திருத்தப்பட்ட ஊரக விலைப்பட்டியல் இவ்வரசாணையின் இணைப்பு –Iலும் மற்றும் கருவேல் மற்றும் பிற மரங்கள் நடுதல் பணிகளுக்கும் 2015–16 ஆம் ஆண்டுக்கு திருத்தப்பட்ட ஊரக விலைப்பட்டியல் இவ்வரசாணையின் இணைப்பு–IIலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

9. இந்த ஆணையானது 01.04.2015 முதல் நடைமுறைக்கு வருகிறது.

10. இந்த ஆணையானது நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.75/இசெ(AR) / 15 நாள்.07.04.2015–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணையின்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர், சென்னை–15 மூலமாக).
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர், சென்னை–15 மூலமாக).
செயலாளர், ஊரக வளர்ச்சி அமைச்சகம், ஊரக வளர்ச்சித் துறை, இந்திய அரசு, கிரிஷி பவன், புதுதில்லி–110 114.
மாநில கணக்காயர், சென்னை–6/18/35
இயக்குநர், கருவூலங்கள் மற்றும் கணக்குகள், சென்னை–15.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சென்னை – 108.
நகல்
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித்துறை, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை)
அரசுச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–9.
நிதி(ஊரக வளர்ச்சி)துறை, சென்னை–9
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (அ.ந.2)துறை, சென்னை–9
தேசிய தகவலியல் மையம், சென்னை–9
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – 1

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் - 2015-16 ஆம் அண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட

ஊரக விலைப் பட்டியல் விவரம்

| வ. எ ண் | வேலையின் விபரம் | 2014-15 ஆம் ஆண்டில் ம.கா.தே.ஊ.வே.உ.திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கூலி (நாள் ஒன்றுக்கு குறைந்த பட்ச ஊதியம் ரூ.167/- பெறுவதற்கு நபர் ஒருவர் 1 மணி நேரம் ஓய்வு உட்பட 8 மணி நேரத்தில் செய்ய வேண்டிய பணியின் அளவு) | 2015-16 ஆம் ஆண்டில் ம.கா.தே.ஊ.வே.உ. திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கூலி (நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.183/- பெறுவதற்கு நபர் ஒருவர் 1 மணி நேம் ஓய்வு உட்பட 8 மணி நேரத்தில் செய்ய வேண்டிய பணியில் அளவு) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | மண் தோண்டுதல் (சாதாரண மண்) | | |
| | வகை ___ 1 | | |
| | மண் தோண்டுதல் மற்றும் தோண்டிய மண்ணை 10 மீட்டர் தூரத்திற்கு மற்றும் 2 மீட்டர் உயரத்திற்கு கொண்டு சென்று கொட்டுதல் (சாலை, பாசன வாய்க்கால், குளம், குட்டை) | | |
| | 0.3 மீ ஆழம் வரை | 118.86/க.மீ | 130.25/க.மீ |
| | 0.30 மீ முதல் 0.60 மீ ஆழம் வரை | 139.31/க.மீ | 152.66/க.மீ |
| | 0.60 மீ ஆழத்திற்கு மேல் | 155.68/க.மீ | 170.60/க.மீ |
| | வகை-2 | | |
| | நிலம் சமப்படுத்துதல் | 170.03/க.மீ | 186.32/க.மீ |
| | வடிகால் வெட்டுதல் | 106.62/க.மீ | 116.84/க.மீ |
| | மரக்கன்றுகள் நடுவதற்கான குழிகள் தோண்டுதல் | | |
| | பல்வேறு அளவுகளில் மரக்கன்று நடுவதற்கான குழிகள் தோண்டுதல் | 207.45/க.மீ | 227.33/க.மீ |
| 2 | மண் தோண்டுதல் (கடின மண்) | | |
| | வகை ___ 1 | | |
| | மண் தோண்டுதல் மற்றும் தோண்டிய மண்ணை 10 மீட்டர் தூரத்திற்கு மற்றும் 2 மீட்டர் உயரத்திற்கு கொண்டு சென்று கொட்டுதல். (சாலை, பாசன வாய்க்கால், குளம், குட்டை) | | |
| | 0.3 மீ ஆழம் வரை | 159.39/க.மீ | 174.66/க.மீ |
| | 0.30 மீ முதல் 0.60 மீ வரை | 196.76/க.மீ | 215.61/க.மீ |
| | 0.60 மீ ஆழத்திற்கு மேல் | 204.35 / க.மீ | 223.93/க.மீ |
| | வகை ___ 2 | | |
| | நிலம் சமப்படுத்துதல் | 197.45 / க.மீ | 216.37 / க.மீ |
| | வடிகால் வெட்டுதல் | 160.54/ க.மீ | 175.92 / க.மீ |
| | மரக்கன்றுகள் நடுவதற்கான குழிகள் தோண்டுதல் | | |
| | பல்வேறு அளவுகளில் மரக்கன்று நடுவதற்கான குழிகள் தோண்டுதல் | 251.13 / க.மீ | 275.19 / க.மீ |
| 3 | மண் தோண்டுதல் (மென்பாறை) வெடிபொருட்கள் பயன்படுத்தாமல் | | |
| | வகை ___ 1 | | |
| | மண் தோண்டுதல் மற்றும் தோண்டிய மண்ணை 10 மீட்டர் தூரத்திற்கு மற்றும் 2 மீட்டர் உயரத்திற்கு கொண்டு சென்று கொட்டுதல். (சாலை, பாசன வாய்க்கால், குளம், குட்டை) | | |

| | | | |
|---|---|---|---|
| | 0.3 மீ ஆழம் வரை<br>0.30 மீ முதல் 0.60 மீ வரை | 234.81/க.மீ<br>268.05/க.மீ | 257.31/க.மீ<br>293.73/க.மீ |
| | 0.60 மீ ஆழத்திற்கு மேல் | 305.86/ க.மீ | 335.16/க.மீ |
| | வகை ___ 2 | | |
| | நிலம் சமப்படுத்துதல் | 345.95 / க.மீ | 379.09 / க.மீ |
| | வடிகால் வெட்டுதல் | 193.10/ க.மீ | 211.60 / கி.மீ |
| | பல்வேறு அளவுகளில் மரக்கன்று நடுவதற்கான குழிகள் தோண்டுதல் | | |
| | பல்வேறு அளவுகளில் மரக்கன்று நடுவதற்கான குழிகள் தோண்டுதல் | 318.10 / க.மீ | 348.58 / க.மீ |
| 4 | நீளம் மற்றும் உயரம் | | |
| | கூடுதலான ஒவ்வொரு 10 மீ தூரத்திற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஆரம்ப தூரத்திற்கும் (10 மீ) மேல் | 26.55 / க.மீ | 29.09/ க.மீ |
| | கூடுதலான ஒவ்வொரு 10 மீ உயரத்திற்கு அல்லது நிர்ணயிக்கப்பட்ட ஆரம்பத்திலிருந்து (2 மீ) மேல் | 9.48 / க.மீ | 10.39/ க.மீ |
| 5 | அனைத்து வகையான மண்களிலும் கன்றுகள் மற்றும் விதைகள் நடுதல் | | |
| | 0.30 மீ x 0.30 மீ x 0.30 மீ | 3.13 / எண்ணிக்கை | 3.43 / எண்ணிக்கை |
| | 0.45 மீ x 0.45 மீ x 0.45 மீ | 4.06 / எண்ணிக்கை | 4.45/ எண்ணிக்கை |
| | 0.60 மீ x 0.60 மீ x 0.60 மீ | 8.25 / எண்ணிக்கை | 9.04/ எண்ணிக்கை |
| | 0.90 மீ x 0.90 மீ x 0.90 மீ | 12.35 / எண்ணிக்கை | 13.53/ எண்ணிக்கை |
| 6 | கன்றுகளுக்கு நீரூற்றுதல் | | |
| | கன்றுகள் மற்றும் மரங்களுக்கு அருகிலுள்ள நீர் ஆதாரங்கள் மூலம் நீரூற்றுதல் (கிணறு/அடிகுழாய்/100 மீ தூரத்திற்கு மிகாமல் அமைந்துள்ள குளம், குட்டையிலிருந்து) | 7.94 / எண்ணிக்கை | 8.70 / எண்ணிக்கை |
| 7 | முட புதர் அகற்றுதல் | | |
| | புதர் அகற்றுதல் | 10.83 / ச.மீ | 11.87 / ச.மீ |
| | வளர்ந்த முட்புதர் அகற்றுதல் | 11.17 / ச.மீ | 12.24 / ச.மீ |
| | அடர்ந்த முட்புதர் அகற்றுதல் | 14.22 / ச.மீ | 15.58/ ச.மீ |
| | அடர்ந்த கருவேல முட்புதர் அகற்றுதல் | 18.96 / ச.மீ | 20.78/ ச.மீ |
| 8 | வெட்டிய மரத்தின் அடிக்கட்டை அகற்றுதல் | | |
| | அடிக்கட்டையின் தடிமன் 30 செ.மீக்கு குறைவாக இருந்தால் | 131.63/ எண்ணிக்கை | 144.24/ எண்ணிக்கை |
| | அடிக்கட்டையின் தடிமன் 30 செ.மீ இருந்து 60 செ.மீ வரை இருந்தால் | 156.44 / எண்ணிக்கை | 171.43 / எண்ணிக்கை |
| 9 | மண் கட்டிகளை உடைத்தல், இறக்குதல் மற்றும் சமப்படுத்துதல் | | |
| | சாதாரண மண் | 1 | 20.03/ச.மீ |
| | கடின மண் | - | 29.71/ச.மீ |
| | மென்பாறை | - | 38.53 / ச.மீ |
| 10 | பழைய கரைகளில் படி அமைத்தல் 45 செ.மீ x 45 செ.மீ | | |
| | சாதாரண மண் | - | 31.77/ச.மீ |
| | கடின மண் | - | 43.99 /ச.மீ |

| | | | |
|---|---|---|---|
| 11 | கரையை இறுக்குதல் (இரும்பு தகடுகள் கொண்டு) | | |
| | சாதாரண மண் | - | 12.01/ச.மீ |
| | கடின மண் | - | 16.68/ச.மீ |
| | மென்பாறை | - | 22.81/ச.மீ |

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## இணைப்பு - 2

## 2015-16 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கருவேல் மற்றும் இதர மரங்கள் நடுவதற்கான கூலி விவரம்

| வ. எண் | வேலையின் விபரம் | 2014-15 ஆம் ஆண்டில் ம.கா.தே.ஊ.வே.உ. திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கூலி (நாள் ஒன்றுக்கு குறைந்த பட்ச ஊதியம் ரூ.167/- பெறுவதற்கு நபர் ஒருவர் 1 மணி நேரம் ஓய்வு உட்பட 8 மணி நேரத்தில் செய்ய வேண்டிய பணியின் அளவு) | 2015-16 ஆம் ஆண்டில் ம.கா.தே.ஊ.வே.உ.திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கூலி (நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.183/- பெறுவதற்கு நபர் ஒருவர் 1 மணி நேம் ஓய்வு உட்பட 8 மணி நேரத்தில் செய்ய வேண்டிய பணியின் அளவு) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | 10 மீ x 1 மீ அளவில் 10 படுகைகள் கொண்ட நாற்றுப்பண்ணை அமைக்க நிலத்தை சுத்தப்படுத்தி சமப்படுத்துதல் | 488.59 /எண்ணிக்கை | 535.40/ எண்ணிக்கை |
| 2 | 10 மீ x 10 மீ x 0.30 மீ அளவில் விதை முளைக்கும் படுகை அமைத்தல் | 307.76/ எண்ணிக்கை | 337.25/ எண்ணிக்கை |
| 3 | நாற்றுப்பண்ணையை சுற்றி தூரிகை மர வேலி அமைத்தல் | 50.77/மீ | 55.63/மீ |
| 4 | விதை முளைக்கும் படுகைக்கு தினமும் இருமறை பூ வாலி மூலம் நீர் ஊற்றுதல் (15 நாட்களுக்கு) | 42.94/படுகை | 47.05 / படுகை |
| 5 | விதை முளைக்கும் படுகைக்கு தினமும் இருமறை பூ வாலி மூலம் நீர் ஊற்றுதல் (30 நாட்களுக்கு) | 21.47/படுகை | 23.53/ படுகை |
| 6 | பாலிதீன் பைகளில் கரமாணி செம்மண் நிரப்புதல் 0.84 மீ3 /1000 | 214.71/க.மீ | 235.28/க.மீ |
| 7 | பாலிதீன் பைகளில் கரமாணி வண்டல் மண் நிரப்புதல் 0.84 மீ3 /1000 | 143.87/க.மீ | 157.65/க.மீ |
| 8 | மண் கட்டிகளை உடைத்து, வளமான மண்ணுடன் (தேவைக்கேற்ப செம்மண், வண்டல் மண் மற்றும் மணல்) இணைத்து 3:1 என்ற விகிதத்தில் தொழு உரத்துடன் சேர்த்து பாலிதீன் பைகளில் நிரப்புதல் மற்றும் மண் நிரப்பப்பட்ட பாலிதீன் பைகளை படுகைகளில் அடுக்குதல் மற்றும் நாற்றுகளை நடுதல் (மண் மற்றும் தொழு உரத்தின் செலவினம் நீங்கலாக) | 5010.00/1000 எண்ணிக்கை | 5490.00/1000 எண்ணிக்கை |
| 9 | தொட்டியில் உள்ள கன்றுகளுக்கு தினமும் இருமுறை ரோஸ் கேன் மூலம் நீர் ஊற்றுதல் (நாற்றங்கால் படுகைகளில் இருந்து நீர் எடுக்க வேண்டிய இடம் 10 மீ முதல் 20 மீ க்குள்) | 143.14/1000 எண்ணிக்கை | 156.85/1000 எண்ணிக்கை |
| 10 | தொட்டியில் உள்ள கன்றுகளுக்கு தினமும் ஒருமுறை பூ வாலி மூலம் நீர் ஊற்றுதல் | 71.57/1000 எண்ணிக்கை | 78.43/1000 எண்ணிக்கை |
| 11 | தொட்டியில் உள்ள கன்றுகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் பூ வாலி மூலம் நீர் ஊற்றுதல் (60 நாட்களுக்கு) | 71.57/1000 எண்ணிக்கை | 78.43/1000 எண்ணிக்கை |
| 12 | மரக்கன்றுகள் உள்ள தொட்டிகளை இடம் மாற்றுதல், களை எடுத்தல், தரம் பிரித்தல் மற்றும் சேதம் அடைந்த பாலிதீன் பைகளை மாற்றுதல் | 334.00/1000 எண்ணிக்கை | 366.00/1000 எண்ணிக்கை |
| 13 | நாற்றங்காலை பாதுகாக்கும் தொழிலாளி மற்றும் நாற்றங்காலுக்கு உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் தெளிப்பதற்கு | 167.00/நாள் | 183.00/நாள் |

| | | | |
|---|---|---|---|
| 14 | Vizhal புற்களை நீக்குதல் | 21.20 /ச.மீ | 23.23/ச.மீ |
| 15 | Ipomoea தாவரங்களை நீக்குதல் | 8.50 /ச.மீ | 9.31/ச.மீ |
| 16 | அடிக்கட்டைகளை வேருடன் அகற்றுதல் | | |
| | 30. செமீ தடிமனுடைய அடிக்கட்டைகளை அகற்றுதல். | 131.63 எண்ணிக்கை | 144.24/ எண்ணிக்கை |
| | 30. செமீ முதல் 60 செ.மீ வரை உள்ள அடிக்கட்டைகளை அகற்றுதல். | 156.44/ எண்ணிக்கை | 173.43/ எண்ணிக்கை |
| 17 | மரம் நடுவதற்கான எல்லைகளை அமைத்தல் ( 1மீ அகலத்திற்கு) | 21.20/ச.மீ | 23.23/ச.மீ |
| 18 | எல்லைகள் நடுவதற்கான குழிகளை அமைத்தல்.(30 செ.மீ X30செ.மீX45 செ.மீ) எல்லைகள் நடுமிடம் தோராயமாக எல்லைகள் 25 கி.மீக்குள் கிடைக்குமிடத்திலிருந்து (கற்களின் விலை நீங்கலாக) | 17.89/ எண்ணிக்கை | 19.60/ எண்ணிக்கை |
| 19 | 3 செ.மீ X3செ.மீ அளவில் வரிசைப்படுத்துதல், குறியிடுதல் மற்றும் அடுக்குதல். | 190.86/100 எண்ணிக்கை | 209.15/100 எண்ணிக்கை |
| 20 | பாலிதீன் பையிலுள்ள கன்றுகளை தனியார் வாகனங்களிலோ/துறை வாகனங்களிலோ 2 கி.மீ தொலைவிற்குள் ஏற்றி இறக்க (வாகனத்தின் வாடகை நீங்கலாக) | 104.97/100 எண்ணிக்கை | 115.03/100 எண்ணிக்கை |
| 21 | பாலிதீன் பையிலுள்ள நாற்றுகளை வாகனங்கள் செல்ல முடியாத இடத்திற்கு தலைச்சுமையாக கொண்டு செல்லுதல். | 286.29/100 எண்ணிக்கை | 313.72/100 எண்ணிக்கை |
| 22 | 100 மீ தூாரம் நாற்றுகளை விநியோகித்தல். | 204.22/100 எண்ணிக்கை | 223.79/100 எண்ணிக்கை |
| 23 | 200 மீ தூாரம் நாற்றுகளை விநியோகித்தல். | 255.75/100 எண்ணிக்கை | 280.79/100 எண்ணிக்கை |
| 24 | 500 மீ தூாரம் நாற்றுகளை விநியோகித்தல். | 417.40/100 எண்ணிக்கை | 457.39/100 எண்ணிக்கை |
| 25 | 500 கிராம்/குழி அளவில் உவர் மண்ணில் ஜிப்சம் நிரவுதல் (மண் ஆய்வு அறிக்கைப்படி - ஜிப்சத்திற்கான செலவினம் நீங்கலாக) | 2.39/குழி | 2.62/குழி |
| 26 | மரம் ஒன்றிற்கு 250 கிராம் வீதம் கோழி எரு இடுதல் (ஏற்றுக்கூலி இறக்குக்கூலி உட்பட (உரத்திற்கான செலவினம் நீங்கலாக) | 3.82/குழி | 4.19/குழி |
| 27 | பட்டுப்போன மரக்கன்றுகளை மீண்டும் குழியை தோண்டி நடுதல் (போக்குவரத்து மற்றும் மரக்கன்றுகளின் செலவினம் நீங்கலாக) | | |
| | 0.30 மீ X0.30 மீ X0.30.மீ | 593.42/100 எண்ணிக்கை | 650.27/100 எண்ணிக்கை |
| | 0.45 மீ X0.45 மீ X0.45.மீ | 784.31/100 எண்ணிக்கை | 859.45/100 எண்ணிக்கை |
| | 0.60 மீ X0.60 மீ X0.60.மீ | 1721.53/100 எண்ணிக்கை | 1886.47/100 எண்ணிக்கை |
| | 0.90 மீ X0.90 மீ X0.90.மீ | 4259.44/100 எண்ணிக்கை | 4667.53/100 எண்ணிக்கை |
| 28 | மண்ணின் தரத்தை மேம்படுத்துவதற்காக மரக்கன்றுகளை சுற்றி 1 மீ அளவிற்கு களைகளை நீக்குதல் மற்றும் 15 செ.மீ ஆழம் வரை மண்ணை வெட்டி விடுதல் மற்றும் புற்களை அகற்றுதல். (மரங்கள் நட்டவுடன் ஒருமுறையும், பருவ மழைக்கு பிறகு ஒரு முறையும் களை எடுத்தல்) | 3607.20/1000 எண்ணிக்கை | 3952.80/1000 எண்ணிக்கை |
| 29 | அளவீட்டு எல்லையில் பனை மரங்களை ஒரு வரிசையில் 1 மீ இடைவெளியில் நடுதல். | 3.02 / எண்ணிக்கை | 3.31/ எண்ணிக்கை |

ககன்தீப் சிங் பேடி
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்